# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2312/71 - 2022 දෙසැම්බර් මස 31 වැනි සෙනසුරාදා - 2022.12.31

*2312/71 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டம்***

*1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் கீழ், பீடிக்கான புகையிலை வரியொன்றினை விதித்தல்*

*2004 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, புகையிலை வரி (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளைப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, திசெம்பர் 31.

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் பீடிக்கான புகையிலை வரி அறவிடப்படுவதற்கான ஒழுங்குவிதிகள் என அறியப்படுவதுடன், இவை 2023, சனவரி 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பீடிக்கும் ரூபா இரண்டு (ரூபா. 2/-) என்ற விகிதத்தில் புகையிலை வரியொன்று அறவிடப்படுதல் வேண்டும்.

3. பீடி உற்பத்தியாளராக செல்லுபடியான பதிவுச் சான்றிதழொன்றினைக் கொண்டுள்ள ஆளொருவர் அத்தகைய பீடித் தொழிற்சாலையில் ஏதேனும் வாரமொன்றில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பீடிக்காகவும், நிர்ணயிக்கப்பட்ட புகையிலை வரியை அடுத்து வரும் வாரம் முடிவடைவதற்கு முன்னர் செலுத்தவேண்டியதுடன், உரிய திகதியில் செலுத்தத் தவறிய அத்தகைய புகையிலை வரி தொடர்பாக பஞ்சாங்க மாதமொன்றிற்கு மூன்று சதவீத (3%) விகிதத்தில் தாமதக் கட்டணமொன்றினைச் செலுத்துதல் வேண்டும்.

4. அத்தகைய பீடி உற்பத்தியாளருக்கான செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை வைத்திருக்கும் எவரேனும் ஆளொருவர், குறிப்பிட்ட பீடித் தொழிற்சாலையில் ஏதேனும் வாரமொன்றில் உற்பத்தி செய்யப்படும் பீடிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றிற்காக செலுத்த வேண்டிய புகையிலை வரியைக் குறிப்பிட்டு, தன்னால் ஒப்பமிடப்பட்டு சான்றுப்படுத்திய புகையிலை வரியை மதுவரி ஆணையாளர் நாயகம் அல்லது அத்தகைய பணிக்காக மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட மதுவரி பரிசோதகர் பதவியை விடக் குறையாத உத்தியோகத்தர் ஒருவருக்கு, குறிப்பிட்ட வாரம் முடிவடைந்து அடுத்து வரும் 02 வேலை நாட்கள் முடிவடைய முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. அத்தகைய பீடி உற்பத்தியாளருக்கான செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை வைத்திருக்கும் எவரேனும் ஆளொருவரால் சமர்ப்பிக்கப்படும் புகையிலை வரி அறிக்கை, 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 3(4) ஆம் உப பிரிவின்படி, மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட உரிய படிவமொன்றில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது மதுவரி ஆணையாளர் நாயகம் அல்லது அத்தகைய பணிக்காக மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட மதுவரி பரிசோதகர் பதவியை விடக் குறையாத உத்தியோகத்தர் ஒருவரின் கணக்காய்விற்கு உட்பட்டதாதல் வேண்டும்.

6. பீடி உற்பத்தியாளர் என்ற பதிவுச் சான்றிதழைக் கொண்டுள்ள ஏதேனும் பீடித் தொழிற்சாலையில், அந்தந்த காலத்தில் நடைமுறையிலுள்ள புகையிலை வரி (பொது) ஒழுங்குவிதிகளினாலும், காலத்திற்குக் காலம் மதுவரி ஆணையாளர் நாயகத்தினாலும் அறிமுகப்படுத்தப்படும் ஆவணங்கள், புத்தகங்கள், படிவங்கள், பிரகடனங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவை இற்றைவரைப்படுத்தி பராமரிக்கப்பட வேண்டிதுடன், பரீட்சிப்புக்காக அவை கோரப்படும்போது, மதுவரி ஆணையாளர் நாயகம் அல்லது அத்தகைய பணிக்காக மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட மதுவரி பரிசோதகர் பதவியை விடக் குறையாத உத்தியோகத்தர் ஒருவருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

7. மதுவரி ஆணையாளர் நாயகம், விநியோகச் சங்கிலி உட்பட பீடி உற்பத்திச் செயல்முறை முழுவதையும், கண்காணித்துப் பரீட்சிப்பதற்கு மதுவரி பரிசோதகர் பதவிக்குக் குறையாத அதிகாரி ஒருவரை அல்லது அதிகாரிகளை நியமிக்கலாம்.

8. பீடிகளுக்கு விதிக்கப்படும் புகையிலை வரி தொடர்பான இந்த ஒழுங்குவிதிகள், 2009.10.26 ஆந் திகதி அன்று வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1625/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் அதன் தொடர்ச்சியான திருத்தங்களுக்கும் இணையாக நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

EOG 01 - 0196

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.